1992 மார்ச் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 345, திருமதி மரியமுல் ஆசியா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

345—

கைத்தறித் தொழிலாளர்களுக்கு சலுகைகள் மீண்டும் அளித்தல்.

*2513—திருமதி மரியமுல் ஆசியா:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு மானியமும். ஊக்கத் தொகையும் அளிக்கப்பட்டது நிறுத்தப்பட்டுள்ளதால், அந்த சலுகைகளை மீண்டும் அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் மானியமோ அல்லது ஊக்கத்தொகையோ எதுவும் நிறுத்தப்படவில்லை.

முற்பகல் 10–05

திருமதி மரியமுல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு என்று கொடுக்கப் பட்டிருந்த மானியமோ, ஊக்கத்தொகையோ நிறுத்தப்பட வில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன தற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கைத் தறிக்கு என்று ஒதுக்கப்பட்ட ரகங்களை விசைத்தறி மூலம் உற்பத்தி செய்து விடுகிறார்கள். அதன் காரணமாக கைத்தறி நெசவாளர்களுக்கு உரிய கூலி கிடைப்பதில்லை. இந்த கைத்தறி ரகத்தை கைத்தறி நெசவாளர்களே உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: இது குறித்துப் பரிசீலிக் கப்படும்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. கந்தசாமி,

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு வாழ்வளிக்கும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு என்று தள்ளுபடி கொடுத்த

வகையில், மாநில அரசு பல லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டி உள்ளது. அதை உடனடியாகக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் எந்தெந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் வாயிலாக மானியம் தரவேண்டுமென்று தெரிவிப்பார்களானால், அதற்குரிய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி மரியமுல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சிட்டா நூல் பெற தனியார் ஆலைகளையே பெரிதும் நம்பி யிருக்கிறார்கள். மேலும் சிட்டா நூல் கிடைப்பது சற்று கடின மாக இருக்கிறது. நியாயமான விலையில் உரிய நேரத்தில் கிடைக்க கூட்டுறவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அம்மா, இந்தக் கேள்வி, மானியம் மற்றும் ஊக்கத் தொகை பற்றியது. சிட்டா நூலுக் கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. தனிக் கேள்வி போடவும். வினா எண் 346. திரு. ஆர். ஈஸ்வரன், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

346—

நீர்த்தேக்கத் திட்டங்கள்.

* 1022 திரு. ஆர். ஈஸ்வரன்:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

உள்ளார் நீர்த் தேக்கத் திட்டம், கோம்பை ஆறு அணைத் திட்டம், செண்பகவல்லி அணைத்திட்டம் ஆகிய திட்டங்களை விரைந்து நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திட்டத்தின் பெயர்.	அரசு எடுத்த நடவடிக்கை.
1. உள்ளார் நீர்த் தேக்கத் திட்டம்.	அரசின் பரிசீலனையில் உள்ளது
2 கோம்பை ஆறு அணைத் திட்டம்.	பயன் பெறத் தக்க வகையில் நிறைவேற்ற சாத்தியக்கூறு இல்லை.
3 செண்பகவல்லி அணைத் திட்டம்.	கேரள அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.